அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 20 /2017
தேதி: 18.2.2017

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

பரபரப்பான அரசியல் சூழலில் தமிழக சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க இன்று கூடியிருந்த சட்டமன்ற கூட்டத்தில் ஜனநாயக முறைப்படி ரகசிய வாக்கெடுப்பே சிறந்த முறையாக இருந்திருக்கும். ஆனால் சபாநாயகர் அவர்கள் ரகசிய வாக்கெடுப்பு நடத்தமுடியாது என்று திட்டவட்டமாக மறுத்தது ஜனநாயகத்திற்கு முரணானதாகும்.

தமிழக சட்டசபையில் 15 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் (பொறுப்பு) அவர்கள் அறிவித்திருந்தார். இன்று சட்டமன்றம் தொடங்கியவுடன், சபாநாயகர் அவர்களிடம் பெரும்பாலான கட்சிகள் ரகசியவாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்தும் அனைவரது கோரிக்கைகளையும் சபாநாயகர் அவர்கள் நிராகரித்து குரல் வாக்கெடுப்பு மூலம் பெரும்பான்மையை நிரூபிக்க அனுமதித்திருப்பது வருந்தத்தக்க செயலாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்கு சென்று மக்களின் உண்மையான மனநிலையையும், அவர்களின் எதிர்பார்ப்பையும் அறிந்துக்கொண்டு அவற்றை பிரதிபலிக்கும் வகையில் அனைவரும் மனசாட்சிப்படி நடந்துக்கொள்வதுதான் உண்மையாக ஜனநாயகமாக இருந்திருக்கும்.

சட்டசபையில் இன்று நடந்த நிகழ்வுகள் அனைத்தும் கண்டனத்துக்குரியது. எதிர்க்கட்சியினர் சபாநாயகரை தாக்கி அவரது இருக்கையில் அமர்ந்து அநாகரீகமாக நடந்து கொண்டது, அ.தி.மு.க-வின் பிளவை தி.மு.க. பயன்படுத்திக்கொள்ள நினைத்து நடந்து கொண்ட விதம் தவறென்றாலும் எதிர்க்கட்சி தலைவர் திரு ஸ்டாலின் அவர்களை சட்டசபையில் தாக்கியிருப்பதும் கண்டனத்துக்குரியது.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்